பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 09

வியாழக்கிழமை
05 டிசெம்பர் 2024

கார்த்திகை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

அரசியல்கைதிகள்

## விரைவில் விடுதலை

கொழும்பு, டிசெ. 5
அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு காலம் தாழ்த்தாது விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன 10



# மாகாணசபைகளுக்கு அடுத்த வருடம் தேர்தல்

காணி விடுவிப்பில் கூடுதல் கரிசனை

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்

தமிழரசுக் கட்சியினரிடம் அநுர உறுதி

கொழும்பு, டிசெம்பர் 5

**2025** ஆம் ஆண்டில் கட்டாயம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என வும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார். 11

## தேசிய மக்கள் சக்திதான் இன்று வடக்கு, கிழக்கின் பிரதான கட்சி

சபை முதல்வர் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 5
தற்போது தேசிய மக்கள் சக்தியே வடக்கு, கிழக்கு மக்களினதும் பிர தான கட்சியாகும். எனவே மக்கள் வழங்கியுள்ள ஆணையின் அர்த் தத்தை புரிந்துகொள்ளுங்கள் என்று சபை முதல்வரும், அமைச் சருமான பிமல் ரத்நாயக்க தெரி வித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று, அரசமைப்பின் 11

## பேஸ்புக்கில் பிரபாகரன்: இளைஞருக்கு பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 5
விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்ப டத்தை பேஸ்புக்கில் பதி விட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட இளை ஞருக்கு நீதிமன்றம் பிணை வழங்கி உத்த ரவிட்டுள்ளது.
குறித்த சந்தேகநபர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய 72 11

## தீர்வு வழங்கப்படும்வரை மாகாணசபை இருக்கும்!

ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 5
தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் வரையில், மாகாணசபை முறை நடைமுறையில் இருக்கும். கலந்துரையாடல்கள் இடம்பெறாமல் மாகாண சபை முறைமை நீக்கப்படாது என்று ரில்வின் சில்வா கூறியுள்ளார். 11

## அரசின் கொள்கைப் பிரகடனம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 5
அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான தீர் மானம் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது.
அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர் 11

## வெள்ளத்துள் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, டிசெ. 5
பரந்தன் - பூநகரி வீதி யில் செல்வபுரம் பகுதி யில் வீதியோரமாகத் தேங்கியிருந்த நீருக் குள் இருந்து சடல மொன்று மீட்கப்பட்டுள் ளது.
பூநகரி - பள்ளிக்குடா பகுதியைச் சேர்ந்த செல்லையா கனிஷ்ட நாதன் (வயது-69) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள் ளார். சம்பவம் தொடர் பாக பூநகரி 11

## யாழ்ப்பாணக் கடற்பரப்பில் பெருமளவு கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 5
யாழ்ப்பாணக் கடற்பரப் பில் 75 மில்லியன் ரூபா பெறுமதியான சுமார் 188 கிலோ 350 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப் பட்டுள்ளன.
குருநகரை அண்டிய கடற் பரப்பில் சந்தேகத்துக்கு இடமான முறை 11

புதிய சட்டம் இயற்றப்படும்வரை

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருக்குமாம்

நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 5
சர்வதேச நெறிமுறைக்கு அமைய புதிய சட்டம் இயற்றப் படும்வரை தற்போதைய பயங்கரவாதத் தடைச் 11

## 5 கோடிக்கு புகையிலை வாங்கியவர் தலைமறைவு

தேடிப்பிடித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 5
ஊர்காவற்றுறைப் பகுதி யைச் சேர்ந்த புகையி லைச் செய்கையாளர்களி டம் புகையிலையைக் கடன் அடிப்படையில் கொள்வ னவு செய்து, 5 கோடி ரூபா வுக்கும் மேல் நிலுவை வைத்துவிட்டுத் தலைமறை வான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் 11

கச்சாய் - ஊரெல்லை

## சாவகச்சேரி நகரசபையால் வெள்ளநீர் வெளியேற்றல்!



சாவகச்சேரி, டிசெ. 5
சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட கச்சாய் ஊரெல்லைப் பகுதியில் தேங்கி நின்ற வெள்ளநீர் சாவ கச்சேரி நகரசபையின் வழிகாட்டுதலின் 11

முச்சந்தி முரளி



'பார' போறநின பூமியில எல்லாம் இப்ப 'பார்' போட்டுத் திரியிறம் கண்டியளோ...'

## வடக்கு மாகாணத்துக்கு 57 'பார்' அனுமதிப்பத்திரங்கள்

கொழும்பு, டிசெ. 5
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வடக்கு மாகாணத்துக்கு 57 'பார்' அனுமதிப் பத்திரங்கள் வழங் கப்பட்டுள்ளதாக நாடாளு மன்றத்தில் நேற்று வெளிப் படுத்தப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அரசியல் இலஞ்சமாக 362 மதுபான அனுமதிப்பத்திரங்கள் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ள தாக அரசாங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது. கடந்த ஜன வரி மாதம் முதல் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கான நீதியில் இந்த அரசும் வேடதாரியே!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் காட்டம்

**யாழ்ப்பாணம், டிசெ.5**

**எம்மால் நிராகரிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு புதியவர்களை உள்வாங்க ஆட்சேர்ப்புச் செய்ய முனைவதானது எம்மைத் தொடர்ந்து ஏமாற்றும் முயற்சியாகும். மாற்றம் எனும் கோஷத்துடன் பதவி ஏறிய புதிய அரசு, பழைய சிங்கள அரசுகள் போலவேதான் தமிழ் மக்களின் முக்கியமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை அணுகவுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.**

- இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு புதிய நியமனக் கோரிக்கை தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் 15 வருடங்களாக எமது உறவுகளைத் தேடி வருகின்றோம். தொடர்ந்து வந்த அரச தலைமைகளால் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டு வந்ததால் சர்வதேச நீதியை வலியுறுத்தி இன்னும் போராடி வருகின்றோம்.

இந்த அரசாங்கம் உண்மையாகவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்புவார்களாயின் செயற்றிறனற்ற காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை உடனடியாகக் கலைக்க வேண்டும். அதை விடுத்து எம்மால் நிராகரிக்கப்பட்ட இந்த அலுவலகத்துக்கு புதியவர்களை உள்வாங்க ஆட்சேர்ப்புச் செய்ய முனைவதானது எம்மைத் தொடர்ந்து ஏமாற்றவே சகலரும் முயற்சிக்கிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

மாற்றம் எனும் கோஷத்துடன் பதவி ஏறிய புதிய அரசு, பழைய சிங்கள அரசுகள் போலவேதான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை அணுகவுள்ளது என்பதையே இது காட்டுகின்றது - என்றுள்ளனர். (ச-125)

## இனமுறுகல் ஏற்படுத்தல் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.5

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் இனமுறுகலை ஏற்படுத்துவதற்கு அரசியல் குழுவொன்று முயல்வது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் இடம்பெற்ற மாவீரர்தினநிகழ்வுகள் குறித்த வீடியோக்கள் இந்த வருடம் பதிவிடப்பட்டுள்ளன.

சமூக ஊடகங்களில் போலியான பதிவுகளை வெளியிட்டு இனமுறுகல் ஏற்பட முயற்சிக்கப்படுகிறது. இதன்பின்னணியில் அரசியல் குழுவொன்று செயற்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இதுகுறித்து விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## சொத்துகள் கொள்ளை மீட்பதற்கு 3 சட்டங்கள்

கொழும்பு, டிசெ. 5

கொள்ளையிடப்பட்ட சொத்துகளை மீளப்பெறும் நோக்கில் 3 புதிய சட்டவரைவுகள் அடுத்த காலாண்டின் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதற்கமைய குற்றச் செயல்கள் தொடர்பான சட்டவரைவு, மீட்பு, புனர்வாழ்வு மற்றும் வங்குரோத்து சட்டவரைவு மற்றும் கணக்காய்வு சட்டவரைவுக்கான திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கொள்ளையிடப்பட்ட சொத்துகளை மீளப்பெறுதல், நிதிமோசடி மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றை திறம்படத் தடுக்கும் நோக்கில் இந்தச் சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

கணக்காய்வு சட்டத்தின் திருத்தங்கள் கடனாளிகளின் நம்பிக்கையை மேம்படுத்துவதுடன் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ச-இ)

## மாகாணசபை முறையை அரசாங்கம் நீக்கவில்லை

### ரில்வின் சில்வாவின் கருத்துக்கு அரச தரப்பு விளக்கம்



கொழும்பு, டிசெ.5

மாகாணசபை முறைமையை நீக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் தற்போதுவரை அரசாங்கம் எடுக்கவில்லை. என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபை முறை நீக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ள கருத்துத்தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேட்டபோதே சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசமைப்பு மூன்று வருடங்களின் பின்னரே கொண்டுவரப்படும். அதிகாரப்பகிர்வு தொடர்பில் கலந்துரையாட போதுமான கால அவகாசம் உள்ளது. ஏனையோர் சொல்வதைக் கேட்டு முறையற்ற சந்தேகங்களை எழுப்பவேண்டாம்.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுடனும் ஜனாதிபதியுடனும் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தித் தருகிறோம். அதன்போது இந்த விடயம் குறித்து பேச்சு நடத்தலாம் - என்றார். (ச-இ)

## அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ.5

இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதியின்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்நாட்டுச் சந்தையில் தற்போது நிலவுகின்ற நாட்டரிசி மற்றும் ஏனைய அரிசி வகைகளின் பற்றாக்குறையையும் கடும்மழை காரணமாகவும் நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் கருத்தில் கொண்டு அரிசி இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி இம்மாதம் 20ஆம் திகதி வரை எமது நாட்டுக்கான அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## இனவாதத்தை ஒடுக்கினால் தீவிரவாதம் தலைதூக்குமாம்

கொழும்பு, டிசெ.5

இனவாதத்தை ஒடுக்கும் முயற்சியானது நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலைதூக்குவதற்கு இடமளிப்பதாக அமையக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் இனவாதம் பற்றிக் கதைக்கப்படுகின்றது. நல்லாட்சி அரசாங்கமும் இப்படித்தான் ஆட்சிக்கு வந்தது. அன்றும் இனவாதம் பற்றிக் கதைத்தனர். இறுதியில் தீவிரவாதத்தில்போய்தான் முடிந்தது. இனவாதம் மற்றும் தீவிரவாதம் என்பது இருவேறுபட்ட விடயங்கள். இரண்டையும் ஒன்றாக பார்க்கக்கூடாது - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும கொடுப்பனவு அரசாங்கத்தால் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.5

அஸ்வெசும பயனாளிகளுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம் சாதாரண கொடுப்பனவு 8ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 10ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கான கொடுப்பனவு 15ஆயிரம் ரூபாவிலிருந்து 17ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இதேவேளை அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஜனவரி மாதம் 6ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)




## மதுபான வரிநிலுவையெனில் அனுமதிப்பத்திரங்கள் இரத்து

கொழும்பு, டிசெ.5

மதுபான வரி நிலுவையைச் செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யப்போவதாக மதுவரித்திணைக்களம் அறிவித்துள்ளது.

நவம்பர் 31ஆம் திகதிக்கு முன்பாக மதுபான வரி நிலுவையைச் செலுத்துமாறு மதுவரித்திணைக்களம் அறிவித்தது. மூன்று நிறுவனங்கள் இதுவரை வரி நிலுவையை செலுத்தவில்லை என்றும் நீதிமன்றத்தின் உத்தரவுக்காக தாங்கள் காத்திருப்பதாகவும் மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை மதுவரித்திணைக்களத்தின் உத்தரவுக்கு எதிராக இடைக்காலத்தடை விதிக்குமாறு மெண்டிஸ் நிறுவனம் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

## திருச்சி முகாமிலிருந்து மீனவரை விடுவியுங்கள்

### உறவினர் கோரிக்கை

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனலைதீவு கடற்றொழிலாளர்களை விடுவிக்குமாறு அவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி கடற்றொழிலுக்காக சென்ற அனலைதீவைச் சேர்ந்த இரு கடற்றொழிலாளர்களும், கடற்சீற்றத்தில் சிக்குண்டு தமிழகக் கடற்பரப்பில் தத்தளித்த நிலையில், தமிழக கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இந்திய நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த இருவரையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நோக்குடன் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே அவர்களை படகு மூலம் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்களின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளனர். (ச-25,125)

## வருமானவரியை குறையுங்கள்

### மருத்துவர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ.5


மருத்துவர்களிடம் அறவிடப்படும் வருமானவரியை குறைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் சமில விஜேசிங்க தெரிவித்துள்ளார். மருத்துவத்துறை பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளது. குறைந்த சம்பளத்தில் கடமையாற்றும் மருத்துவர்களிடமிருந்து வருமானவரி அறவிடப்படுகின்றமையால் மருத்துவர்கள் வெளிநாடு செல்கின்றனர். எனவே எமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்கும் என நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ரி-6)

## எல்லை தாண்டிய மீனவர்கள் 18 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ.5

பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட காரைக்கால் மீனவர்கள் 18 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து குறித்த 18 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே மீனவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ரி-1002066)



## பாதுகாப்புப் படை கட்டளைத் தளபதி யாழ்.மாவட்ட செயலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ 5

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, யாழ்.மாவட்ட செயலர் ம. பிரதீபனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை இராணுவத் தொண்டர் படையின் கட்டளைத் தளபதியாகப் சந்தன விக்கிரமசிங்கவுக்கு பதவி உயர்வு கிடைத்ததையிட்டு மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மாவட்டச் செயலர் கட்டளைத் தளபதிக்கு நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தார். (ச-25, 66)

வீட்டுக்கட்சியில மாவையரின்ர பழைய பதவி விலகல் கடிதத்தை வைச்சு, அவரை அந்தப் பதவியில இருந்து தூக்கினால், அவருக்குப் பதிலா இப்ப பதில் தலைவரா இருக்கிறவர் வந்திடுவார். கட்சி எலக்சனில வெண்ட தலைவர், வழக்கெல்லாம் முடிஞ்சு பதவியேற்கிறவரை இந்தப் பதில் தலைவர்தான் வீட்டுக் கட்சியைக் கொண்டிழுக்க வேணும். 'இதுக்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' எண்ட மாதிரி அவைத்தலைவருக்கு வீட்டுக்கட்சித் தலைமை போகும் போலதான் தெரியுது. இந்தப் பதவிக்கு அவர் கனநாளாக் கனவு கண்டாலும், கட்சிக்குள்ள தனக்கு அந்தளவுக்கு ஆதரவில்லை எண்டதால 'சீச்சி, இந்தப் பதவி புளிக்கும்' எண்டு சொல்லிக்கொண்டு திரிஞ்சவருக்கு இனி சுக்கிரதிசைதான் போல.

மாவையர் அவசரப்பட்டு கடிதம் அனுப்பினதால அவரின்ர தலைமைப்பதவிக்கு மேல இப்ப கத்தி தொங்கும் எண்டது எல்லாருக்குமே தெரியும். ஆனால் அதெப்பிடி பதில் செயலாளரும் இருக்கேக்க இன்னொருத்தர் அந்தப் பதவிக்கு வர ஏலும்? எப்பிடி அந்தப் பதவியை சத்தியமான டாக்குத்தர் விட்டுக்குடுப்பார்? எண்டு சிலர் யோசிப்பியள். அங்கதான் விசயமிருக்கு. கட்சி எப்பிடி நடக்கவேணும், என்னென்ன செய்யோணும் எண்டு டிசைட் பண்ணிக்கொண்டிருந்த அப்புக்காத்தர், எலக்சனில அவுட் ஆனாலும், தேசியப்பட்டியலால கட்சிக்காரர் தன்னைக் கரைசேர்த்துப் போடுவினம் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தார். ஆனால் அப்புக்காத்தர் வளர்த்த பச்சைக் கிளியே கச்சேரிக்கு வந்த மாதிரி சத்தியமான டாக்குத்தர் அந்தப்பதவியை படக்கெண்டு பிடிச்சிட்டார். எண்டாலும் அப்புக்காத்தரை கவிட்டுப்போட்டு அந்தப்பதவியில இருந்தால் என்னென்ன சிக்கலெல்லாம் வருமெண்டு டாக்குத்தருக்கு வடிவாத் தெரியும். அதால தான் செய்த திருகுதாளத்துக்குப் பிராயச்சித்தமா பதில் செயலாளர் பதவியில இருந்து விலகப்போறாராம். இப்ப அவர் எம்.பி.யா இருக்கிறதால கட்சிப்பதவி இருந்தால் மக்கள் பணி செய்யக் கஷ்டம் எண்டு காரணமும் சொல்லப்போறார்.

அப்பிடி அவர் பதில் செயலாளர் பதவியில இருந்து விலகினால், இப்ப துணைச் செயலாளரா இருக்கிற அப்புக்காத்தர் தான் அடுத்த பதில் செயலாளர். 'தேசியப்பட்டியல் எனக்கு, செயலாளர் பதவி உங்களுக்கு' எண்டு டாக்குத்தர் அப்புக்காத்தரோட கதைச்சு அவரைச் சமாளிச்சிட்டார் எண்டும் கதை. அநேகமா கட்சியின்ர அடுத்த மத்தியகுழுக்கூட்டத்தில இந்தப் பதவிமாற்றங்கள் வரக்கூடும். இப்பிடியே இவையள் சங்கீதக் கதிரை மாதிரி ஒவ்வொரு பதவியா சுத்திச் சுத்தி ஓடிக்கொண்டு சுத்துமாத்திக்கொண்டு இருக்கப்போயினமே தவிர சனத்தைக் கவனிக்கவே மாட்டினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அமையும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** கணவன் - மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** இறைவழிபாட்டுடன் நாளைத் தொடங்குவீர்கள். உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக் கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் உதவி கேட்டு வருவார்.

## கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

தென்மராட்சி பிரதேசசெயலகப்பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க்கொடுப்பனவு போன்றவை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் நேற்று புதன்கிழமை முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்தவுள்ளதால் கொடுப்பனவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

## நினைவு தினமும் நூல் அறிமுகமும்

யாழ்ப்பாணம், டிசெ.5

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பேராசிரியர் கைலாசபதியின் 42 ஆவது நினைவு தினக்கூட்டம், காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.இராஜநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் 'கலை இலக்கிய ஆய்வுகளில் சமூகவியல் அணுகுமுறைகள்' எனும் தலைப்பில் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து மறைந்த கே.ஏ.சுப்பிரமணியம் 1974-1989 வரையான காலப்பகுதியில் தாயகம் சஞ்சிகையில் எழுதிய 'ஆசிரியத் தலையங்கங்கள்' நூல் அறிமுகம் இடம் பெறும். நூலின் அறிமுகஉரையை ஓய்வுநிலை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும் நன்றியுரையை தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலமும் ஆற்றுவர். (ச-25, 10)



வவு. பேருந்து நிலையத்தில்

## இ.போ.ச. – தனியார் பஸ் தரப்பினர்கள் கைகலப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் இ. போ. ச.பேருந்து மற்றும் தனியார் பேருந்து தரப்பினர் இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறிய நிலையில் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பேருந்துகள் புறப்படும் நேரம் தொடர்பில் வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப்புறப்படத் தயாராக இருந்த இ.போ.ச. பேருந்து தரப்பினருக்கும் தனியார் பேருந்து தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதன்போது இ.போ.ச. வவுனியா சாலை தரப்பினர் தமது நேரக்கணிப்பாளர் மீது தனியார் பேருந்து நடத்துநர் தாக்குதல் நடத்தியதாகக் கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு போராட்டத்தில் குதித்தனர்.

இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தினர். அதேவேளை தாக்குதலில் காயமடைந்த இ.போ.ச. நேரக்கணிப்பாளர் மருத்துவமனையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ளதையடுத்து தனியார் பேருந்து நடத்துநர் மீது வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110, 100)

## நலன்புரி முகாமில் தகராறு; கைதான இருவருக்கு பிணை

மழை வெள்ளத்தில் பாதிப்புக்குள் ளான மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கற்கோவளம் பாடசாலை யில் அண்மையில் தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை குறித்த முகாமில் சிலர் தகராறில் ஈடுபட்டதுடன் நிவாரணப் பொருள்களை வழங்கும் பணிக்கு இடையூறு விளைவித்தனர் என அந்தப் பகுதி கிராம அலுவலரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த இருவரை கைதுசெய்தனர். அவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த சனிக்கிழமை முற்படுத்திய போது நேற்று வரை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. இந்தநிலையில் குறித்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் முன்னிலையாகி முன்வைத்த விவாதத்தின் அடிப்படையில் அவர்களை பிணையில் விடுக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-25-27-100)



## சுகவீனமுற்ற யானை சாவு

யாழ்ப்பாணம், டிசெ.5

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானை நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். வவுனியா குடாகச்சக்கொடி வயல்வெளியில் சுகவீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கடந்த ஐந்து நாள்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் குறித்த யானை உயிரிழந்துள்ளது. (ச-110)

## வேலைவாய்ப்பும் பயிற்சி முகாமும்

கிளிநொச்சி மாவட்ட மனிதவலு வேலைவாய்ப்பு அலகினர் மற்றும் மாவட்ட செயலகத்தினரின் ஏற்பாட்டில் வேலைவாய்ப்புத் தேடுவோருக்கான தொழிற்சந்தை, மாவட்ட செயலக பழைய கட்டடத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சந்தைப்படுத்தல் துறை, ஹோட்டல் துறை, காப்புறுதித் துறை, ஆடைகள் உற்பத்தித் துறை, விவசாயத் துறை மற்றும் தாதியர் சேவை ஆகியவற்றுக்கு ஆட்சேர்ப்பும் மற்றும் கணினி, ஹோட்டல் முகாமைத்துவம், சுற்றுலாத் துறை, ஏனைய துறைகளுக்கான பயிற்சி முகாமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அடக்கம் ஓர் ஆபரணம் மட்டுமல்ல, நல்லொழுக்கத்துக்கான காவலுமாகும்.

– ஜோசப் அடிசன் –


# 13 க்கு முடிவுகட்ட ஏனிந்த அவசரம்?

இலங்கையின் அரசமைப்பில் 13ஆவது திருத்தம், மாகாணசபை முறை என்பன தேவையற்றன என்றும் அவற்றால் தமிழர்கள் எந்தப் பயனும் அடையாத காரணத்தால் காலவோட்டத்தில் அவை நீக்கப்பட வாய்ப்பிருப்பதாகவும் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் கொள்கை வகுப்பாளருமான ரில்வின் சில்வா. தேசிய மக்கள் சக்தியினர், ஜே.வி.பி.யாக இருந்த காலத்தில் இருந்தே மாகாணசபை முறையை தமது முழுப் பலத்தையும் திரட்டி எதிர்த்தே வருகின்றனர். தற்போது அந்த எதிர்ப்பின் வேகமும், வீச்சும் அரசியல் முதிர்ச்சி காரணமாகக் குறைந்திருந்தாலும், ரில்வினின் அறிவிப்பு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் பின்னணி - காலச்சூழல் என்பன மிகவும் அபாயகரமானவை. இலங்கைக்குள் பிராந்திய மோதல்களை அனுமதித்து - வறிதான இராஜதந்திரத்துடன் தான் தேசிய மக்கள் சக்தி நகரப் போகின்றதா? என்ற கேள்விகளே தற்போது பூதாகரமாக மேலெழும்புகின்றன. தமிழ் மக்கள் தமக்குரிய தீர்வாக 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் அதனை ஓர் ஆரம்பப்புள்ளியாக வைத்தேனும், தீர்வுக்கான நகர்வு தொடங்கவேண்டும் என்பதே பெரும்பாலான தமிழர்களின் விருப்பாக இருக்கின்ற சமயத்தில், அந்த ஆரம்பப்புள்ளியை அகற்ற முனைவதற்கும் இந்த அரசாங்கத்துக்கு காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

இந்த மாதத்தின் இறுதிக்குள் ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். பிரதமர் மோடியையும் அவர் சந்திக்க வாய்ப்பு இருப்பதாகவே கருதப்படுகின்றது. இலங்கைக்குள் 13ஆவது திருத்தமும், மாகாணசபை முறைமையும் கொண்டுவரப்பட்டது இந்தியாவின் நேரடித் தலையீட்டால்தான். எனவே, அந்த விடயங்கள் அரசமைப்பில் இருந்து துடைத்தெறியப்படுகின்றன என்றால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இந்தியத் தலையீட்டை கொழும்பு முற்றாகப் புறக்கணிக்கின்றது என்றே அர்த்தம். இவை அனைத்தையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், இலங்கையில் இந்தியாவின் தலையீட்டை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற செய்தியை வலுவாகச் சொல்லிவிட்டே, அங்கு சென்று 'கெத்துக்காட்ட' அநுர அரசு முற்படுகின்றது.

'இறைமையுள்ள ஒரு நாடு: அனைவருக்கும் சமவுரிமை' என்ற கொள்கைகளின் கீழ், தனது நகர்வுகளுக்கும் முடிவுகளுக்கும் நியாயம் கற்பிப்பதற்கு அநுரகுமாரவின் அரசாங்கம் முயன்றாலும், இவையெல்லாவற்றுக்கும் பின்னணியில், சீனத்துச் செங்கொடி திரைமறைவில் பறந்துகொண்டிருப்பது பட்டவர்த்தனமானதே. அண்மையில் வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கைக்கான சீனத்தூதுவர், தேசிய மக்கள் சக்திக்கு தமிழர்கள் வாக்களித்தமைக்கு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியமையும், அனைத்து இலங்கையர்களின் மனங்களை வென்ற முதல் தலைவராக ஜனாதிபதி அநுர உள்ளார் என்று சான்றளித்தமையையும், சீன அதிபர் ஜின் பிங் - இந்தியப் பயணத்துக்கு முன்பாக அநுர அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்திருக்கும் வாழ்த்துச் செய்தியையும், அநுரவின் சீனப் பயணம் அவசரமாக ஏற்பாடாகி வருகின்றமையையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், மாகாணசபை முறைமையை நீக்குவதில் தேசியமக்கள் சக்திக்கு இருக்கும் அக்கறையைப் புரிந்துகொள்ளலாம்.

சமவுரிமையை வழங்கிய பின்னர், தமிழ் மக்கள் அதில் திருப்தி கொண்டால் அடுத்தகட்டம் தொடர்பில் சிந்திக்கலாம். அதைவிடுத்து வழங்காத உரிமைகளை, வழங்கிவிட்டதாக நினைத்துக் கருத்துக்கூறுவதை ரில்வின் நிறுத்திக் கொள்ள வேண்டும். பறப்பதைப் பிடிப்பதற்காக இருப்பதையும் இழக்க தமிழர்கள் தயாரில்லை. ஏனெனில், இலங்கையில் இதுவரை கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்களின் பட்டியல் மிக நீட்சியானது. ரில்வினும், அநுரவும் அதற்கு ஆகச்சிறந்த சாட்சிகள். இவ்வாறிருக்கையில், சீனர்வைத் திருப்திப்படுத்துவதற்காக, தமிழர்களின் வேணவாக்களை கொன்று புதைக்கத் தேசிய மக்கள் சக்தியினர் தயாராகுவார்களாக இருந்தால், வரலாறு ஒருபோதும் அவர்களை மன்னிக்காது.



# வடக்கு - தெற்கு இடையேயான இனமுறுகலுக்கு இடமளியோம்

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.5**

**இனவாதத்தைத் தூண்டி நாட்டை தீக்கிரையாக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது. வடக்கிலும் தெற்கிலும் உள்ள இலங்கையர்களுக்கு தேசிய ஒற்றுமைக்கான ஆணையை வழங்கியுள்ளோம். அதற்கமைய அதனை உறுதிப்படுத்துவோம்.**

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாள்களாக, மாவீரர் நிகழ்வுகள் குறித்து சமூகத்தில் பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளதால் நினைவுகூரலின்போது அவர்களின் கொடிகள் இலச்சினைகளை பயன்படுத்த அனுமதியில்லை. எனினும் அனைவரும் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடு. இந்தக் கருத்தை திரித்து, தவறான அர்த்தம் கொடுக்கும் வகையில் பலர் இனவாதம் பேசுகின்றனர். இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை செய்துள்ளனர்.

எனவே இனவாதத்தைத் தூண்டி நாட்டை தீக்கிரையாக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது - என்றார். (ச-இ)

# இராணுவப் புலனாய்வு பணிப்பாளர் இடமாற்றம்

கொழும்பு, டிசெ.5

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் சந்திக்க மஹாதந்தில உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர் இராணுவ மேல் மாகாண கட்டளை தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் சுமார் 20 வருடகாலம் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பல பிரதான பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# லிட்ரோ விலை மாற்றமில்லை

லிட்ரோ எரிவாயு விலைச் சூத்திரத்தின் பிரகாரம் நவம்பர் மாதம் லிட்ரோ எரிவாயுவின் விலை திருத்தப்படாது என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன தெரிவித்துள்ளார். 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவாகவும், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகவும், 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 694 ரூபாவாகவும் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# வருமான அறிக்கை சமர்ப்பிக்கும் கால அவகாசம் நீடிப்பு

2023/2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான அறிக்கைகளை சமர்ப்பிக்கும் திகதி எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்தத் திகதியில் அல்லது அதற்கு முன் வருமான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச)



# டெங்கு ஒழிப்புக்கு கியூபா கைகோர்ப்பு

கொழும்பு, டிசெ.5

நாட்டில், டெங்கு அச்சுறுத்தலை இல்லாதொழிக்கும் நோக்கில் நிலையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க அரசாங்கம் கியூபா அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளது. அதற்கமைய டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த கியூபாவில் இருந்து பக்றீரியா மாதிரிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வெள்ளிக்கிழமை - கார்த்திகை - 21
06.12.2024
சுபநேரம் : 06.17 - 07.47
ராகுகாலம் : 10.47 - 12.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 11 . 1953

மறைவு 17 . 12 . 2023

யாழ். ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும்,
ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் விமலராணி தங்கராஜா


ஆண்டு ஒன்று அகன்றோடிப்போனாலும் ஆறுமோ நெஞ்சம்
இன்று உமது நாள் எம் நெஞ்சை வாட்டுகின்றதே
மண்ணுலகை விட்டேகிய மங்கையே
மாண்புடனே வாழ எண்ணியிருந்தோம்
எம் நினைவு நிறைவேறாது போயிற்றே!
உம்மோடு நிம்மதியும் முற்றாய் இழந்து
நிர்க்கதியாய் நிற்போம் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை
துடுப்பை இழந்த படகெனவே துன்பக் கடலில் தத்தளித்தே
கரைக்கும் ஒதுங்க முடியாத கண்ணீர்க் காவியம் இதுவே
எம் இதயம் நெகிழ்ந்த கண்ணீர்த் துளிகள்தான் அம்மா நீங்கள்!

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புளியங்கன்று வீதி,
ஆனைக்கோட்டை.

(CS/56823) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 01 . 1946

மறைவு 04 . 12 . 2024

## தம்பையா குஞ்சிதபாதம்

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, தாவடி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குஞ்சிதபாதம் நேற்று (04.12.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், செந்தூரன் (டென்மார்க்), மகீபன் (ACL விற்பனைப் பிரதிநிதி), சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிவேதா (டென்மார்க்), ராதிகா (BOC - புன்னாலைக்கட்டுவன்), சத்தியசீலன் (GS லிங்கநாதன் அன்கோ), ஆகியோரின் மாமனாரும், கந்தசாமி, செல்வராணி, அம்பிகாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிஷானா, ஸஸ்வின், சர்வின், நிஷான், நேத்திரா, நிகிதன், அஸ்விகன், சங்கரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 758 3617

பத்தானை வீதி,
தாவடி.

(CS/56793) N-1

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 04.11.1933 இறப்பு : 05.12.2013

## குருநாதர் சுந்தரமூர்த்தி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பதினோராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

பன்னாலை,
தெல்லிப்பளை.

(cs.1968)(N-1)

மனைவி, மகள்,
பேரப்பிள்ளைகள்.

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி

## யோகாம்பிகை இராமலிங்கம்

(புங்குடுதீவு 12 - நாரந்தனை)

பிறப்பு 28.11.1939

இறப்பு 05.12.2017

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாகவும்
இருந்த எமது அம்மாவே!
நீங்கள் மறைந்து ஏழு
- ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறையாது
நீங்கள் தெய்வமாக இருந்து
எங்களை வழி நடத்தி,
ஆசீர்வதியுங்கள் அம்மா!

என்றும்
உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், மகன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்- 2025
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை

2025ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் /வீட்டு உபகரணப்பொருட்கள்/ பிளாஸ்ரிக்பொருட்கள்/இரும்புப் பொருட்கள்
02. காகிதாதிகள் / எழுது பொருட்கள் / சீருடைகள் / மழைக்கவசங்கள்
03. மின்சார உபகரணங்கள் மற்றும் தெரு விளக்கு மற்றும் உதிரிப்பாகங்கள்
04. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/ சிமெந்துக் கற்கள்.
05. ரயர் வகைகள்/ ரியூப் வகைகள் / பற்றிவகை / வாகன உதிரிப்பாகங்கள்
06. வாகனம், இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள்.
07. கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்
08. புகைப்படப்பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ டுப்ளோஇயந்திரம்.
09. நூலக நூல்கள்.
10. சிமெந்து / கண்ணாடி உற்பத்திகள்/ அலுமினியவேலைகள்/ இரும்பு உட்பட கட்டடப்பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள்/ பதாகைகள்/ பெனர் / ஸ்டிக்கர்.
12. துடைப்பம்/ விளக்குமாறு/ தும்புத்தடி/ தூரிகைகள்/ சிறியகால்துடைப்பங்கள்/ கழுவும் திரவங்கள் சுகாதாரப்பொருட்கள்
13. சிற்றுண்டி / மதியஉணவு
14. வீதி அபிவிருத்திப் பொருட்கள் (தார் / கல் / மண் / கற்குற்றிகள் )
15. சிறுவர் பூங்கா உபகரணங்கள்.

**சேவைகள்**

01. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
02. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
03. கணினி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
04. மோட்டார் வாகன திருத்த வேலைகள்/ சேவிஸ் செய்தல்.
05. பதாகைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/ தயாரித்தல்/ அச்சடித்தல்
06. இறப்பர் முத்திரை தயாரித்தல்.
07. டியூப் ஒட்டுதல், ரயர்களுக்கு திரிவைத்தல், ரயர்களை மீள நிரப்புதல், ரயர்களை மாற்றுதல் போன்ற சேவைகள்.
08. நிர்மாண ஒப்பந்த வேலைகள்
09. ஏற்றியிறக்கும் வாகனங்களினை வாடகைக்கு விடல்
10. பாதுகாப்பு சேவை / சாரதி சேவை / சுத்திகரிப்புச் சேவை
11. இரும்பு ஒட்டு வேலைகள்.
12. மரக்கன்றுகள் / பூங்கன்றுகள்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி இல. 0212241130 மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

**பொது நிபந்தனைகள்**

01. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ளும் நிர்மாண ஒப்பந்ததாரர்
    01. 50,000.00 ரூபா வரை 500.00
    02. 50,000.00 ரூபா முதல் 1,500, 000.00 வரை 1500.00
    03. 1,500,000.00 ரூபா முதல் 2,000,000.00 வரை 2000.00
    04. 2,000,000.00 ரூபாவுக்கு மேல் 2500.00
ஏனையோர் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித் தனியாக 1000.00 ரூபா கட்டணத்தையும் செலுத்தவேண்டும்

02. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடம் விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலை மனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.

03. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கட்டப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள் சேவையை வழங்கத்தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்து செய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

04. விண்ணப்பதாரர்கள் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் உரிய கட்டுப்பணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க முடியும் தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் **"செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை"** என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 7573141 இலங்கை வங்கி காங்கேசன்துறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து வைப்புச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

05. எல்லா விண்ணப்பங்களும் 2024.12.28 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2025 ஆம் வருடத்திற்கான வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**

(cr.43832) (N-1)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 . 10 . 1993

உதிர்வு 29 . 11 . 2019

## அமரர் செல்வி ம. கோபினா

திதி: சதுர்த்தி (05.12.2024)

**எட்டாத உயரத்தில் நானிருந்து பேசுகிறேன்**

ஆண்டு பலவாக சொர்க்கபுரி நகரிலே கோபினா
வாழுகிறேன் - நீண்ட நாளாக விரி புவியில் உங்களுடன்
பேசிட ஆசை கொண்டேன் - இன்றெனக்கு
விடுமுறைதான் ஆதலால் பேசுகின்றேன்.
தந்தையே நனி நலமோ ? தாயே நீர் பெரு நலமோ
என் சிந்தை நிறைந்து தினம் உமை நான் நினைத்திடுவேன்
கட்டியணைத்து முத்தமிட்டு நாளாச்சே ! தினம் தினம்
உங்கள் அன்பை நீள நினைந்திடுவேன்.
தாத்தாமார் ! பாட்டியரே ! உங்கள் நலமறிந்து
கதைத்ததிலே உள்ளுருகி நிற்கின்றேன்
நித்தம் நலம் வாழ என்றும் என் பிரார்த்தனைகள்
மாமாமார் மாமியரே ! உங்கள் சுகம் எப்படியோ?
நன்றாய் வாழ நானென்றும் வாழ்த்திசைப்பேன்
சித்தப்பா சித்தியென்றும், பெரியப்பா, பெரியம்மாவென்றும்
உடன்பிறவா உறவென்றும் உற்றார் உறவுகளாய்
புவியுறையும் உறவுகளே !அத்தனை பேரும் எப்படி
உள்ளீர்கள் ? நானும் நலமேதான் குமரபுரம் வாழும்
சின்னக்குழந்தைகளே ! நிறைவுடனே நீர் வாழ
இறைவனிடம் இறைஞ்சிடுவேன் உங்கள் அக்கா!
சொர்க்கபுரி இருந்து சுகம் கேட்க விதியாச்சே!
எட்டாத உயரத்தில் நானிருந்து பேசுகின்றேன்.

**கோபினா**

(28913) (N-1)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**அன்னை மடியில்** 03.10.1932

**ஆண்டவன் அடியில்** 25.11.2014

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த

## அமரர் கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

(இளைப்பாறிய OA, வவுனியா கச்சேரி)

**(திதி : வளர்பிறை சதுர்த்தி)**

ஐயா என்ற ஆலமர நிழலில் இருந்தவரை
வாழ்க்கை என்னும் வெயில் எம்மை சுட்டதே இல்லை
எத்தனையோ உறவுகள் இம் மண்ணில் இருந்தாலும்
அத்தனையிலும் மேன்மை என் ஐயா தானே
ஐயா நாங்கள் நினைத்தவுடன்
கண்களில் இருப்பாய் கண்ணீராக
வழி மேல் விழி வைத்து காத்திருக்கின்றோம்
வந்து விடுங்கள் மீண்டும் எங்களிம் ஐயா !
பத்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் மனதில்
என்றென்றும் நிறைந்திருக்கும்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**துயர் பகிர்வோர்**
**குடும்பத்தினர்**

(cs 56806) (N-1)

# டெங்கு பரவல் ஒழிப்பு; சுகாதாரத்துறை அதிரடி

யாழ்ப்பாணம், டிசெ. 5

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளதால் சுகாதாரத்துறை அதன் கடமைகளை தீவிரப் படுத்தியுள்ளது.

அதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு பரவும் சூழல் அவதானிக்கப்பட்ட 83 வீடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 25 ஆயிரத்து 542 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 10 ஆயிரத்து 16 வீடுகள் நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயிரத்து 54 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் 922 வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு 290 இடங்களுக்கு புகையூட்டப்பட்டுள்ளது.

டெங்கைக் கட்டுபடுத்த வீதிக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்ற உதவியுடன் கொள்கலன்கள் குறித்த ஒரு நாளில் அகற்றப்படுகின்றன. இத்தகைய நடைமுறைகள் கைப்பற்றப்பட்டு வந்தாலும் எதிர்காலத்தில் சீரற்ற காலநிலையால் டெங்கு பரவக்கூடிய அபாயத்தைத் தவிர்க்க விழிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 125)



# மரக்கறி விலை
## சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5

வெள்ளப்பாதிப்பின் எதிரொலியாக தற்போது மறக்கறிகளின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது. யாழ். திருநெல்வேலிப் பொதுச்சந்தையில் பயிற்றங்காய் ஒரு கிலோ ஆயிரத்து 200 ரூபாவாகவும், தக்காளி கிலோ 600 ரூபாவாகவும், கத்தரி கிலோ 380 ரூபா முதல் 400 ரூபா வரையும், கரட் கிலோ 300 ரூபாவாகவும், பீற்றூட் கிலோ 250 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 300 ரூபாவாகவும், கறிமிளகாய் கிலோ 900 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 250 ரூபா முதல் 260 ரூபாவாகவும், மரவள்ளிக் கிழங்கு கிலோ 180 ரூபா முதல் 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-25,66)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 65 ரூபா.
நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா.

**077 334 1281**

(CS28745) J-1

## வேலை வாய்ப்பு

1. சாதாரண தரம் வரை படித்துள்ளீர்களா?
2. O/L சித்தியா?
3. A/L சித்தியா?
4. நீங்கள் ஒரு பட்டதாரியா?
5. வீட்டுப்பணிப் பெண்களாக வேலை செய்ய விரும்புவோர்

நீங்கள் விரும்பிய துறையில் வேலை வாய்ப்பை பெறுவதற்கு

**076 578 9372**

(cs.56829) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
12
06
1936



மறைவு
04
12
2024

# கதிரேசு சின்னத்தம்பி

பலாலி மேற்கு வயாவிளானைப் பிறப்பிடமாகவும், துரைஜயா அவனியு, சந்நிதி வீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சின்னத்தம்பி அவர்கள் நேற்று (04.12.2024) புதன்கிழமை நண்பகல் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு-தெய்வானை தம்பதியரின் அன்புப் புதல்வனும், மகாலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகாராணி அவர்களின் பாசமிகு கணவரும், கலைச்செல்வி (மருந்தாளர் யாழ் போதனா வைத்தியசாலை), கயல்விழி (சுவிஸ்), இளங்கோ (பிரான்ஸ்), இளந்திரையன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேல்முருகன் (DO, யாழ் போதனா வைத்தியசாலை ), சிறிஸ்கந்தராசா (சுவிஸ்), கிசியாழினி (பிரான்ஸ்), ஜெயமாலினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்திகன், நதினா, அஸ்வினி, வர்சினி, திஷாந், ஹரிக்சன், திலக்ஷன், போவிகா, யாழகன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, வியாளாச்சி, வைத்திலிங்கம், செல்லமுத்து, கந்தையா, சின்னாச்சி, ஐயாத்துரை மற்றும் பொன்னம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மங்களேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் தவமலர், பரராசா, ரஞ்சிதமலர், யோகமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

துரைஜயா அவனியு,
சந்நிதி வீதி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 626 8226

(CS/1976) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ஆவது ஸ்தாபகர் ஞாபகார்த்த நினைவு நாள்



தோற்றம் 25.10.1936 மறைவு 05.12.1996

### அமரர்
# பொன் நாகமணி

(மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்)

நாகமணி என்றொரு மனிதம்
-மலர்ந்தது
மட்டுவில் தெற்கினிலே!!

வளர்மதி என்றொரு
சமூகம் பிறந்தது
அவரின் எண்ணத்திலே
மானிடம் வளர
வழிகள் சமைத்தவர்
சிந்தனை மலர
கலைகள் செய்தவர்

ஒற்றுமை கண்டிட
ஓடி உழைத்தவர்
தடைகள் களைந்திட
அரும் பணிசெய்தவர்
ஆற்றலுடன் பல எல்லைகள்
-கடந்தவர்

ஏணியாய் இருந்து எம் - ஊரை
- வளர்த்தவர்
வாழும் காலங்கள் அவரை
- நினைக்கும்!!

வல்லமையோடு அவர் எண்ணம்
-மலரும்!!
மதி கொண்ட வாழ்வு அவனியில்
-மலரும்!!

காலங்கள் என்றும் அவர் நாமம்
-போற்றும்!!
நினைவுகள் என்றும் அவர் செயல்
-நினைக்கும்

மாறாத எண்ணங்களோடு
நினைவு கூருகின்றோம்

நிர்வாகம்
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையமும்,
அதன் உப அமைப்புக்களும்.


# வடக்கு மாகாணத்துக்கு முதலீட்டாளர்கள் மன்றம்

ஆளுநர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் இ. ஜெயசேகரன் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது யாழ். நகரில் அமைந்துள்ள புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் மிக நீண்ட காலமாக பயன்பாடில்லாது இருக்கும் தளத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு நிரந்தர சந்தை வாய்ப்பை ஏற்படுத்தமுடியும் என வணிகர்கழப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். யாழ். மாநகரசபையுடன் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னெடுக்க பலர் ஆர்வமாக உள்ளபோதும் அவர்களுக்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான இடங்களையும், அனுமதிகளையும் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக வணிகர் கழகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டிய நிலையில் விரைவில் முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

(ச-33-27)


## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 01 . 1953



மறைவு 03 . 12 . 2024

### மனோன்மணி ஆனந்தகுமாரதாஸ்

சுன்னாகம் தெற்கு, கதிரமலை வீதியை, பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி ஆனந்தகுமாரதாஸ் அவர்கள் (03.12.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆனந்தகுமாரதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் ஜெயானி, ஜெயறூபன், சித்பவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விவேகானந்தசிவம், தர்சிகா, பாலஸயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுந்தரலிங்கம், ஆனந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அரியமலர் மற்றும் ஆனந்தகதிரமலை, ஆனந்தபாமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிஷா, அக்ஷயா, அர்த்திஷா, லஷாங்கி, சாத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.12.2024) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல-31/5,
கதிரமலை வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 666 9512

(CS 1978) P-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 04 . 1940



மறைவு 03 . 12 . 2024

### சரஸ்வதி சின்னத்துரை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடி, கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி சின்னத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (03.12.2024) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், சசிலாதேவி, சண்முகராசா, ரவிச்சந்திரன், சிவதர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடராசா, சதாசிவம், மற்றும் இந்திராணி, சிவராசா, மகாலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினராசா, காலஞ்சென்ற சுமதி, மற்றும் ரஜினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவர்ணா - திவாகரன், தனரூபன் - டினேஷா, பானுஜா-பெஞ்சமின், சாருகா, துஷிகா, சாரங்கி, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனகன், வாரணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இரவீந்திரன் - +94 77 570 0880
சாருஜன் - +94 77 549 7277

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1975) J-1



## மரண அறிவித்தல்

மண்ணுக்கு 02 . 11 . 1986



விண்ணுக்கு 03 . 12 . 2024

### ரேவதி ஜீவகாந்த்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ரேவதி ஜீவகாந்த் அவர்கள் நேற்றுமுன்தினம் (03.12.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மஞ்சத்தடி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
இயேசு ஜீவிக்கிறார்
சர்வதேச ஊழியர்கள் மற்றும்
விசுவாசிகள்.

(CS/56827) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 14.12.1952 — மரணம் 05.12.2021

**அமரர் மேரி பொலின் ஜெயந்திரா ராஜக்கோன்**

அன்புடனும் ஆசையுடனும்

வாஞ்சையாய் எமை அரவணைத்து

அவனியில் எமை வாழ்வாங்கு வாழவைத்து

அம்மா என்ற சொல்லுக்கு

அர்த்தம் கற்பித்தவள் நீ அம்மா !

இல 32, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றும் பாசமுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/56826) J-1

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்.**

**வட்டாரம்-03, செல்லாச்சியம்மையார் வீதி, ஆதன இல. 14/4**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட செல்லாச்சியம்மையார் வீதி. சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் - 03, செல்லாச்சியம்மையார் வீதி. ஆதன இல:14/4ல் Mr.R.கனகசுந்தரம் & R.இரத்தினம் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் சபேசன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை. வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு. J/198 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"கப்பல்வளவு"** எனக்குறிப்பிடப் பட்டுள்ள நிலப்பரப்பு 12 குளி 01.32 உடைய ஆதனமானது 2013.09.28 ஆம் திகதிய 5059 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. மேலும். இவ் ஆதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் 2014.05.24இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2014/1/108 ஆம் இலக்க வரைபடத்தில் **துண்டுகள்** 01,02,03,04,05,06 எனப் பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 12 ஆகும்.

இவ் ஆதனத்தின் துண்டு 04 (நிலப்பரப்பு 01 குளி 4.50) இற்குப் பிரசித்த நொத்தாரிசு குமாரசுவாமி விசுவலிங்கம் அவர்கள் மூலம் 2014.06.07ஆம் திகதிய 5584 ஆம் இலக்க **சீதன உறுதியால். செல்லாச்சியம்மையார் வீதி. சுன்னாகம் மேற்கு. சுன்னாகம்** என்னும் இடத்தை சேர்ந்த **சுப்பிரமணியம் எமலதாசன் பெண் காமினி (907162869V)** எனும் பெயரிற்குப் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.
மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் 2024.11.23இல் அளந்து தயாரிக்கப்பட்ட 6866 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A ஆகிய நிலப்பரப்பு 01 குளி 5.9 ஆகும்.

**அதன் எல்லைகளாக,**

**கிழக்கு - கார்த்தி இளையப்பாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்**
**வடக்கு - திருமதி சுலக்சனா தீபக்கின் ஆதனம்**
**மேற்கு - ஒழுங்கை**
**தெற்கு - செல்வி வினோதினி மனோகரனுக்குரிய ஆதனம்**

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது **சுப்பிரமணியம் எமலதாசன் பெண் காமினி** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். 02.12.2024**

அர்ச்சுனா எம்.பி. நேற்று

# மேதகுவுக்கும், ரோஹணவுக்கும் நாடாளுமன்றத்தில் வீரவணக்கம்

கொழும்பு, டிசெ. 5
நாடாளுமன்றத்தில் நேற்று மேதகுவுக்கும், ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜயவீரவுக்கும் தனது வணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்துவதாக அர்ச்சுனா தெரிவித்தார்.

இருந்தால் தலைவன், இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படும் மேதகுவுக்கும், தமிழர்களின் உரிமைக்காகப் போரிட்ட வீரமறவர்களுக்கும், போரால் கொல்லப்பட்ட முஸ்லிம், சிங்கள, தமிழ் மக்களுக்கும், விசேடவிதமாக ரோஹண விஜயவீரவுக்கும், அவருடைய தோழர்களுக்கும் தனது அஞ்சலியைச் செலுத்துவதாகத் தெரிவித்தே, நாடாளுமன்ற உரையை அர்ச்சுனா ஆரம்பித்தார்.

(ம-இ)



வெள்ள இடரால்

# வடமராட்சியில் காலபோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5
வடமராட்சியில் சில பகுதிகளில் பெரும்போக செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக வெள்ளநீரில் மூழ்கி பயிர்கள் அழிவைச் சந்தித்துள்ளன.
பெரும்போக செய்கைக்காக விவசாய நிலங்களைப் பண்படுத்தி பசளைகளைப் பரவியும் குவித்தும் வைத்திருந்த நிலையில் பெய்த மழையின் காரணமாக அவை வெள்ள நீரோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளன.
இதனால் விவசாயச் செய்கையை ஆரம்பிக்க முன்னதாகவே இழப்புகளைச் சந்தித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-45-100)

## அதிர்ஷ்டலாப வெற்றி இலக்கங்கள்

**இலங்கை பார்வையற்றோருக்கான**
**அறக்கட்டளை நிலையம்.**

- **1ம் வெற்றி இலக்கம் - 6558**
- **2ம் வெற்றி இலக்கம் - 3209**
- **3ம் வெற்றி இலக்கம் - 5372**

**அதிர்ஷ்டசாலிகள் அலுவலக நேரத்தில் வெற்றி இலக்கத்திற்கான சிட்டையைக் கையளித்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு :- சங்கமம் வீதி, கோப்பாய்.**

**T.P No: 070 603 0086**

(CS/56531) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1942



மறைவு 03 . 12 . 2024

**சின்னர் சின்னராசா**

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சின்னராசா நேற்று முன்தினம் (03.12.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர்-லட்சுமி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களன வீரகத்தி-சோதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கேசவன். கேமலதா. கேபவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி. சிவகுமார். நிகேதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸஜானா. யுஸானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி. அப்பையா. செல்லம்மா. சின்னத்தம்பி. சண்முகம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களன மீனாட்சி. சோதிலட்சுமி. ஆறுமுகம் பாக்கியம் மற்றும் இராசமணி. சிவனேஸ்வரி. நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**076 557 5892**
**077 629 4910**
**076 885 7864**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

(CS 56830) P-1



# பருத்தித்துறையில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5
வடமராட்சி உள்ளிட்ட யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்புகள் பெருகும் அபாய நிலை காணப்படுகிறது. இதையடுத்து யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் டெங்கு நோய் தடுப்புப் பிரிவினரால் பருத்தித்துறை நகரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.
பருத்தித்துறை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மற்றும் அவற்றுடன் அமைந்திருக்கும் காணிகள், கிணறுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.
இதன்போது மழை நீர் தேங்கி நின்ற இடங்களில் காணப்பட்ட நுளம்புக் குடம்பிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக எடுத்துச்செல்லப்பட்டதுடன் மழை நீர் தேங்கி நிற்கும் வகையில் சுற்றுச்சூழலை கொண்டுள்ள இடங்களின் உரிமையாளர்களுக்கு அவற்றை சுத்தம் செய்யுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (ச-25, 100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில்...

நாணயக்கார உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டிய போதே, அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள். என்ற உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வழங்கப்பட்டுள்ளது. புதிய அமைச்சரவை பதவியேற்று ஒரு மாத காலப்பகுதிதான் ஆகின்றது. இருந்தாலும் உரிய சட்டத்தரப்புகளுடன் கலந்துரையாடி, கூடிய விரைவில் அரசியல் கைதிகள், சாட்சிகளின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. அத்துடன், ஊழல்கள், மோசடிகள் தொடர்பிலும், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பந்தமாகவும் நிச்சயம் நடவடிக்கைகள் இடம்பெறும் - என்றார். (அ-ம-44)

## பயங்கரவாதத்...

சட்டத்தைப் பயன்படுத்த நேரிடும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நீதி அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார மேலும் தெரிவித்ததாவது:-

எதிரணியில் இருந்தபோது அரச ஒடுக்குமுறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் நாம். எமது மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. எனவே, நாட்டிலுள்ள சட்டங்களை நாம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தமாட்டோம். எவரினதும் உரிமைகளை ஒடுக்குவதற்கு சட்டங்களைப் பயன்படுத்தப்போவதும் இல்லை. நாட்டில் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதை நாம் ஏற்கின்றோம். இது தொடர்பான எமது கொள்கை மாறவில்லை.

எனினும், பூகோள பயங்கரவாதத்துக்கு முகங்கொடுப்பதற்கு வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட சட்டங்கள் உள்ளன. அந்தவகையில் சர்வதேச சமவாயங்களுக்கு அமைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றை கொண்டுவர வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறும்வரை இனவாதம் மற்றும் மதவாதத்தை ஒடுக்குவதற்கு தற்போதுள்ள சட்டங்களையே பயன்படுத்த நேரிடும் - என்றார். (அ-ம-44)

## தேசிய...

13ஆவது திருத்தம் தொடர்பிலும் மாகாணசபை முறைமை தொடர்பிலும் கருத்துகள் பரிமாறப்பட்டதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை. மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். வடக்கு, கிழக்கில் பல தசாப்தங்களாக தமிழரசுக் கட்சியே பிரதான கட்சியாக இருந்தது. அந்தக் கட்சியை நாம் இன்னும் மதிக்கின்றோம். ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தியே வடக்கு, கிழக்கு மக்களினதும் பிரதான கட்சியாகும். எனவே மக்கள் வழங்கியுள்ள ஆணையின் அர்த்தத்தை புரிந்துகொள்ளுங்கள் - என்றார். (அ-ம-44)

## பேஸ்புக்...

மணிநேரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் மீளவும் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## தீர்வு...

மாகாணசபை முறைமை தேவையற்றது என்றும், அது விரைவில் நீக்கப்பட்டு அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்படும் என்றும் ரில்வின் தெரிவித்தார் என அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதையடுத்தே, அந்தச் செய்திகளைத் திட்டவட்டமாக மறுத்துள்ள ரில்வின் சில்வா, தனது கருத்துகள் திரிவுபடுத்தப்பட்டுள்ளன என்று நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக 1987ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் எந்த நன்மையையும் தமிழர்களுக்கு வழங்கவில்லை. அதனால் வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைக்க மிகவும் நடைமுறைச் சாத்தியமானதும், சரியானதுமான தீர்வை முன்வைக்க வேண்டியுள்ளது. அத்தகைய மிகச்சிறந்த தீர்வை முன்வைத்து நடைமுறைப்படுத்தும்வரை 13ஆவது திருத்தத்தையும் மாகாணசபைகளையும் ஒழிக்கப் போவதில்லை என்றே நான் கூறினேன். நான் குறிப்பிடும் தீர்வு, அனைத்துத் தரப்பினர்களினதும் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## யாழ்ப்பாணக்...

யில் பயணித்த மீன்பிடிப் படகொன்று கடற்கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கடற்படையால் வழிமறிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து படகில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதைத் தொடர்ந்து படகைச் சோதனையிட்டபோதே, 188 கிலோ 350 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கஞ்சாவும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ம-20-26)

## 5 கோடிக்கு...

தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அந்த நபர் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக 14 முறைப்பாடுகள் தனித்தனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## வடக்கு...

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிவரை முன்னாள் ஜனாதிபதி ரணிலால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சரும் சபை முதல்வருமான ரத்நாயக்க நேற்று வெளியிட்டார். இதிலேயே வடக்கு மாகாணத்துக்கு ஒட்டுமொத்தமாக 57 'பார்' பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிவரையான காலப் பகுதியில் 363 'பார்' அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 172 அனுமதிப்பத்திரங்கள் சில்லறை மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

மதுபான விற்பனை அனுமதிக்காக, மேல் மாகாணத்துக்கு 110, தென் மாகாணத்துக்கு 48, வடக்கு மாகாணத்துக்கு 32, கிழக்கு மாகாணத்துக்கு 22, மத்திய மாகாணத்துக்கு 45, வடமத்திய மாகாணத்துக்கு 14, வடமேல் மாகாணத்துக்கு 30, ஊவா மாகாணத்துக்கு 30, சப்ரகமுவ மாகாணத்துக்கு 30 என்ற அடிப்படையில் 331 மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சில்லறை மதுபான அனுமதிப்பத்திரங்கள் என்ற வகையில், கொழும்பு 24, கம்பஹா 18, களுத்துறை 8, காலி 9, மாத்தறை 5, அம்பாந்தோட்டை 5, யாழ்ப்பாணம் 5, கிளிநொச்சி 16, வவுனியா 2, மன்னார் 2, திருகோணமலை 4, மட்டக்களப்பு 1, அம்பாறை 5, கண்டி 11, மாத்தளை 6, நுவரெலியா 8, அநுராதபுரம் 4, பொலனறுவை 3, புத்தளம் 6, குருணாகல் 8, பதுளை 9, மொணராகலை 7, இரத்தினபுரி 6 , கேகாலை 2 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விடயங்கள் நாடாளுமன்றத்தின் பார்வைக்காகவும் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## அரசின்...

பான விவாதம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும், நேற்றுக் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரையும் இரண்டு நாள் விவாதமாக நடைபெற்றது. இதைத் தொடர்ந்தே, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது. (அ-ம-இ)

## சாவகச்சேரி...

கீழ் வெளியேற்றப்பட்டு வருகின்றது. அண்மையில் பெய்த கடும்மழையால் கச்சாய் ஊரெல்லையிலுள்ள 523 ஆம் படையணி முகாமுக்கு அண்மையில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருக்கும் பகுதியில் வெள்ளம் வடிந்தோடாத நிலையில் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர். இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து நேரில் சென்று சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்த நிலையில் குறித்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதாக சாவகச்சேரி பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார். (ச-45-27)

*ஆசிரியர் குறிப்பு*

*இந்த விடயம் தொடர்பில் கடந்த 2ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில், 50 பேரைக் கொண்ட குழுவொன்று சட்டவிரோதமாக வாய்க்காலை அமைக்க முற்படுவதாகவும், இதன்மூலம் மணலை அகழ்ந்து செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உதயனைத் தொடர்புகொண்டு அவ்வாறு எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை என்றும், சமூகநலன் கருதியே சில திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் வெளிப்படுத்தியிருந்தனர். இதையடுத்து உதயன் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின்போதும் அது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, உதயனின் முன்னைய செய்தி எவரையாவது உளரீதியாகத் தாக்குமுறச் செய்திருந்தால் அதற்காக உதயன் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றான்.* (ஆ-ர்)

## மாகாண...

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது, மாகாணசபை முறைமையை காலவோட்டத்தில் நீக்குவதாக ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துகள் தொடர்பில் தமிழரசுக்கட்சியினர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்குப் பதிலாகவே, வீண் அச்சம் கொள்ள வேண்டாம் என்றும், அடுத்த வருடம் மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி அநுர கூறியுள்ளார்.

அத்துடன், படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும், பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரவிடம் தமிழரசுக் கட்சியினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் கேட்டறிந்த ஜனாதிபதி அநுர, அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சாதகமாகப் பரிசீலிப்பதாக தமிழரசுக் கட்சியினரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள், தமது இந்தியப் பயணத்துக்கு முன்பாக தமிழ்த் தரப்புடன் கலந்துரையாடலை நடத்துவது வழமை. இந்தியாவை அணுகுவதற்கான 'இலகுவான ராஜதந்திர நகர்வாக' இது பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி அநுரவும் விரைவில் இந்தியாவுக்குச் செல்லவுள்ள நிலையில், அவர் தமிழ்த் தரப்பினரைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வெள்ளத்துள்...

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி வீடு விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)
தொடர்புக்கு: 077 614 6434
(CS/56825) J-1

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

அச்சுவேலி சந்திக்கும், வல்லைவெளி பாலத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய Hand Bag ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் உரிய ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
V.H. Lane, கோப்பாய் தெற்கு, இருபாலை
076 389 0451, 077 683 0575
(CS 1974) J-1

**மணமகள் தேவை**

இலண்டனை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட 56 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.
06.12.2024 வரை - 074 328 5717 என்ற இலக்கத்திற்கும் 08.12.2024 இற்குப்பின் 447985275844 என்ற இலக்கத்திற்கு Whatsapp ஊடாகவும் தொடர்புகொள்ளவும்.

**மரண அறிவித்தல்**



## ரட்ணராஜா ஞானேஸ்வரி

தோற்றம் 12.11.1950 — மறைவு 04.12.2024

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், 588/8, நாவலர் வீதி, கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ரட்ணராஜா ஞானேஸ்வரி அவர்கள் நேற்று (04.12.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ரட்ணராஜா அவர்களின் அன்பு மனைவியும், டினேஸ்க் (ஜனசக்தி இன்சூரன்ஸ், யாழ்ப்பாணம்), டினேந்திரன் (பருத்தித்துறை), ஆகியோரின் அன்புத் தாயாரும், கயாழினி (ஆசிரியர் - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி), சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சதானந்தன், நித்தியானந்தன், மனோகரன், ரஞ்சிதராஜா, லோகேஸ்வரன் மற்றும் இந்துமதி (கனடா) ஆகியோரின் சகோதரியும், தர்மதுரை (கனடா), காலஞ்சென்றவர்களான யோகராஜா, சேதுராஜா, சிவராஜா, தர்மராஜா, சந்திரோதயம், சிவபாக்கியம், முகுந்தராஜா மற்றும் குகராஜா (திருகோணமலை), இந்திராணி (மட்டக்களப்பு), சரஸ்வதி (கனடா), காலஞ்சென்ற சண்முகராஜா ஆகியோரின் மைத்துனியும், லருண், நௌனீகன், யோய்சாய், ரகுராம், காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 588/8, ... வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 739 9678, 077 279 6694
(CS/56824) J-1



# நடுவரின் தீர்ப்பால் 100 பேர் வரை பலி

கினியா, டிசெ.5

நடுவர் சர்ச்சைக்குரிய வகையில் தீர்ப்பு வழங்கியதால் கோபம் அடைந்த இரசிகர்கள் மைதானத்தை முற்றுகையிட்டு மேற்கொண்ட வன்முறையில் 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கால்பந்து போட்டியில் இந்தச் சர்ச்சை நிகழ்ந்துள்ளது.

வன்முறையில் ஈடுபட்ட இரசிகர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தையும் தீவைத்து கொளுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-33)

# முதியவருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 5

சுழிபுரத்தில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து முதியவர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கையில் ... ம் ஏற்பட்ட அந்த வயோதிபர் உறவினர்கள் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில சேர்க்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-125)

# நைஜீரியாவில் படகு விபத்து!

## 27 பேர் பலி

நைஜீரியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொகி மாநிலத்திலிருந்து நைஜரை நோக்கி 200க்கும் அதிகமானவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்த படகே விபத்திற்குள்ளாகியது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் சிக்கி ... ்க்கும் அதிகமானவர்கள் காணாமற்போயுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்து இடம்பெற்று 12 மணித்தியாலத்தின் பின்னரும் எவரும் உயிருடன் மீட்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## பனைமரம் வெட்டியவர் கைதானார்

பனைமரம் வெட்டிய ஒருவரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலகத்துக்குப் பின்பகுதியில் உள்ள காணியில் நின்ற பனைமரமே வெட்டப்பட்டுள்ளது. கைதானவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)



# வடமாகாண ஆளுநருடன் கட்டளைத் தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, யாழ். சுண்டுக்குளியிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். அவர் இடமாற்றமாகிச் செல்லும் நிலையில் மரியாதை நிமித்தமாகக் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ச-25,66)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுக்கப்பட்டோரை விடுவியுங்கள்

## சாணக்கியன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.5

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். தமிழ் மக்களுக்கே உரித்தான பிரச்சினைகள் தொடர்பில் தனது கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி குறிப்பிடாமை கவலையளிக்கின்றது. தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் உள்ளனர். அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது விடயத்தில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அதிகாரப்பகிர்வு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-44)

**வேலையாட்கள் தேவை**

உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
கொத்து, றைஸ் சப்ளையர், உதவியாளர் தேவை.
ஆண், பெண்.
தொடர்பு: 076 657 8654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.